2014 ஜூலை 15]
136—

மேம்பாலம்

***858—திரு. ப. சம்பத்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. ப. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் உயிர்ச் சேதம் அதிகமாக ஏற்படுகின்றது. ஆகையால் பணியைத் துரிதப்படுத்தி உடனே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தைச் சேர்ந்த வையப்பமலை-இராமநாதபுரம் சாலை கிலோ மீட்டர் 3/10-ல் பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தில்*

ரூபாய் 245 இலட்சம் செலவில் மேம்பாலம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 27-4-2014 முதல் பாலப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகளை முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.

திரு. ப. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில், அகரம் ஊராட்சியில், கொத்தம்பாளையம் கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒவ்வொரு ஆண்டும் நபார்டு திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட பாலத்தினைத் தேர்வு செய்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்முற்றம் சிற்றூராட்சி, மேலத்தொட்டியோடை கிராமத்திற்குச் செல்கின்ற தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்திக் கட்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மூன்று ஆண்டு பொற்கால ஆட்சியில்தான் நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பாலப் பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியில் தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதைப் பரிசீலித்து நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகள் 47, 7, 68 ஆகியவை சேலம் மாநகரத்தின் மையப் பகுதியிலே வருகின்றன. அதிலே, குறிப்பாக குரங்குச்சாவடி அருகிலும், ஏ.வி.ஆர். ரவுண்டானா, திருவாக்கவுண்டனூர் ரவுண்டானா, சிவதாபுரம் பிரிவு சாலைப் பகுதிகளிலே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே பல முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கின்றேன். இந்தப் பாலத்தினுடைய அவசியம் பற்றி என்னைவிட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிர்ப் பலி நடப்பதால் மேம்பாலம் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகள் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலையால் பராமரிக்கப்படுகின்ற சாலை. அது மாநில அரசின் கட்டுப்பாட்டில் வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குரங்குச்சாவடியிலே மாநில அரசின் நிதியைக்கொண்டே மேம்பாலம் கட்டுவதற்கு கடந்த ஆண்டு ஆணையிட்டிருக்கின்றார்கள். தற்போது அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், ஐந்து ரோடு பகுதி போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள பகுதி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அந்தப் பகுதியில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஏ.வி.ஆர். ரவுண்டானா மற்றும் திருவாக்கவுண்டனூர் ரவுண்டானா ஆகிய இரண்டு பகுதிகள் குறித்தும் மத்திய அரசிடம் வலியுறுத்திக் கோரப்பட்டுள்ளது, கடிதம் மூலமாகவும் கேட்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு பகுதிகளுமே போக்குவரத்து நெரிசல் அதிகமான பகுதிகள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பணிகளைத் துவங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து திண்டிவனம் வரையிலே மத்திய அரசுக்குச் சொந்தமான தேசிய நெடுஞ்சாலை கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அந்தச் சாலைப் பணிகள் முடியாத காரணத்தினால் தற்போது பல்வேறு விபத்துகள், பயண நேரம் அதிகரிப்பு, அதேபோல எரிபொருள்

2014 ஜூலை 15]

வீணாதல் உள்ளிட்ட பல்வேறு சிரமங்களுக்கு மக்கள் ஆட்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்புகொண்டு இந்தச் சாலைப் பணிகள் எப்போது முடிக்கப்படும் என்ற விவரத்தைத் தெரிவிக்குமாறு தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரியிலிருந்து திண்டிவனம் வரையிலே உள்ள சாலையைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை என்பதை ஏற்கெனவே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அதன்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கடிதம் மூலமாக மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அப்போது மத்தியிலே இருந்த காங்கிரஸ் அரசு அதிலே கவனம் செலுத்தவில்லை. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியாக இருந்தது. இருந்தாலும், அப்போதே நான் சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி, அந்தச் சாலையைச் சீரமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்கள் கிராமங்களிலிருந்து வெளியே வருவதற்கு இடையூறாக, பாலங்கள் இல்லாத காரணத்தை உணர்ந்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது கிள்ளை

சாலையையும், அம்புப்பூட்டிப்பாளையத்தையும் இணைக்கின்ற ஒரு பாலத்தையும், நடராஜபுரத்தையும் வீரங்கோவில்திட்டையும் இணைக்கின்ற ஒரு பாலத்தையும் கட்டித்தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். அவற்றை உடனடியாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்று ஆண்டு பொற்கால ஆட்சியில் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.151 கோடி செலவில் 65 பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் 55 பாலங்களின் பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. 7 பாலங்களின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஒரு பாலப் பணி ஒப்பந்த நிலையில் உள்ளது. இரண்டு பாலங்களின் பணிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.235/- கோடி செலவில் 121 பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 77 பாலங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 34 பாலங்களின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஒப்பந்த நிலையிலே 3 பாலப் பணிகள் இருக்கின்றன; மதிப்பீட்டு நிலையிலே 4 பாலப் பணிகள் இருக்கின்றன; மூன்று பாலப் பணிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-10

2013-2014 ஆம் ஆண்டிலே 256 கோடி ரூபாய் நிதியில் 125 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 5 பணிகள் நிறைவு பெற்று, 81 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஒப்பந்த நிலையிலே 21 பாலங்கள் இருக்கின்றன. 18 பணிகள் மதிப்பீட்டு நிலையிலே இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்றாண்டு பொற்கால ஆட்சியில் இந்தப் பாலப் பணிகளுக்கு நபார்டு திட்டத்தின்கீழ் 642 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 311 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 137 பணிகள் நிறைவு பெற்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

2014 ஜூலை 15]

அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு, தற்போது மக்களுடைய பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. 122 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 25 பணிகள் ஒப்பந்த நிலையிலே இருக்கின்றன. 18 பணிகள் மதிப்பீட்டு நிலையிலே இருக்கின்றன. 5 பணிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, பாலத்தினுடைய தேவையைக் கருதி, அங்கே இருக்கின்ற போக்குவரத்தினுடைய தேவையைக் கருதி, முன்னுரிமை அடிப்படையிலே பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பாலப் பணிகள் குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

கயிறு தொழிற்சாலை

***7144—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் தேங்காய் நார் கயிறு தயாரிக்கும் தொழில் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் ஸ்பூருட்டி (SFURTI) திட்டத்தின்கீழ் ரூ.87.42 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கயிறுக் குழுமம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதன்மூலம் குடியாத்தம் மற்றும் திருப்பத்தூரில் இரு பொது வசதி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருப்பத்தூரில்